# 50

# நமது இடர்ப்பாடுகளுக்குத் தேவன்மீது குற்றம் சுமத்துதல்

## (16:9–21)

*"எந்த ஒரு பறவையும் தனது வால் தன்னைப் பின்தொடரும் தூரத்திற்கு அப்பால் ஒருக்காலும் பறப்பதில்லை" என்று சீனர்கள் ஒரு பழமொழியைக் கொண்டுள்ளனர்.*[1] *வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், எவரொருவரும் தனது செயல்களின் விளைவில் இருந்து தப்பிக்க இயலாது. அந்த உண்மையானது பாவத்தைக் குறித்த விஷயத்தில் குறிப்பாக உண்மையாய் உள்ளது: "உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்" (எண்ணாகமம் 32:23). கோபகலசங்கள் ஏழும் பாவத்தின் பயங்கரமான விளைவுகளைச் சித்தரிக்கின்றன. நமது முந்திய பாடத்தில் நாம், முதல் நான்கு கலசங்களைப் பற்றிக் கூறிமுடித்தோம்; இந்த மற்றும் இதற்கு அடுத்த எடுத்துரைப்புகளில் நாம், கடைசி மூன்று கலசங்களைப் பற்றிக் காண்போம்.*

*நான்காம் கலசம் ஊற்றப்பட்டபோது, அவிசுவாசிகள் "இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை" என்று நாம் கண்டோம் (வசனம் 9ஆ). இந்தப்பாடத்தில், ஐந்தாம் கலசம் ஊற்றப்படும்போது, விளைவு அதேபோன்றதாக இருக்கும்: "தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை" (வசனம் 11). கடைசிக் கலசத்திற்கான பதில்செயலும் இதே போன்றதாகவே இருக்கும்: "மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்" (வசனம் 21ஆ). வெளிப்படுத்தின விசேஷத்தில் வேறு இடத்தில் மிருகம் மாத்திரமே தேவனைத் தூஷித்ததாகக் கூறப்பட்டுள்ளது (13:1, 5, 6; 17:3). இந்த அவிசுவாசிகளும் தேவனைத் தூஷித்தனர் என்ற உண்மையானது, அவர்கள் தங்கள் எஜமானின் ஆவிக்குள் எவ்வளவு அதிகமாக உள்ளீர்க்கப் பட்டிருந்தனர் என்பதைக் காண்பிக்கிறது.*

*தேவனை தூஷித்தல் என்பதன் அர்த்தம் என்ன? "தூஷித்தல்" என்பது "பேசுவதன் மூலம் புண்படுத்துதல்"*[2] *என்ற நேரடியாக அர்த்தப்படும் கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. தேவனை தூஷித்தல் என்றால், தேவனுக்கு எதிராகப் பேசுதல், அவரது நோக்கத்தை மற்றும் அவர் எதற்காக நிலைநிற்கின்றாரோ அவை யாவற்றையும் அழிக்க முயற்சி*

செய்தல் என்பதாக உள்ளது. மிருகத்தைப் பற்றி, அது, ''தேவனைத் தூஷிக்கும்படி தன்வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர் களையும் தூஷித்தது'' என்று கூறப்பட்டுள்ளது (13:6). இது சபையைப் பற்றிப் பரப்பப்பட்ட அவதூறான கூற்றுகளை குறிக்கிறது என்று நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம்.

மிருகத்தைப் பின்பற்றினவர்களின் தூஷணமும் இது போன்றதாக இருந்தது: 9ம் வசனம், "தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்கள்" என்று கூறுகிறது; அவர்கள் அனேகமாக, தேவனுடைய நற்பெயரைத் கெடுக்கும் வகையிலான மிருகத்தின் கூற்றைப் போலச் செய்திருப்பார்கள். இத்துடன் கூடுதலாக, அவர்களின் தூஷணமானது ஒரு தனிப்பட்ட கோணத்தைக் கொண்டிருந்தது: அவர்கள் தங்களின் இடர்ப்பாடுகளுக்காகத் தேவனைக் குற்றம் சுமத்தினர். அவர்கள் நவீன காலத்தில் தங்களின் உடனாளிகளைப் போல் இருந்திருப்பார்கள் என்றால், தேவனைப் பற்றிய அவர்களின் விமர்சனமானது பின்வருவது போன்றதாகவே இருந்திருக்கும்: "தேவன் நியாயமற்றவராய் இருக்கின்றார்! இப்படிப்பட்ட கடினமான தண்டனைக்கு நாங்கள் பாத்திரராய் இருப்பதில்லை!" "தேவன் அன்பின் தேவனாக இருக்கின்றார் என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர்; ஆனால் இது அன்பாய் இருக்கும் என்றால் இதில் எந்த பகுதியும் எனக்குத் தேவையில்லை!'' அவர்கள் தங்கள் செயல்களுக்குரிய ''நியாயமான பிரதிபலனை'' பெற்றிருந்த போதிலும், தேவனை அதற்குப் பொறுப்பாளியாக்கினர் (எபிரெயர் 2:2).

காலத்தின் தொடக்கத்தில் இருந்தே, மனிதன் தனது இடர்ப்பாடுகளுக்குப் பிறரைக் குற்றம் சாட்டமுயற்சி செய்துள்ளான்: ஆதாம் தனது பாவத்திற்காக ஏவாள்மீது குற்றம் சுமத்தினார், மற்றும் ஏவாள் சர்ப்பத்தின்மீது குற்றம் சுமத்தினாள் (ஆதியாகமம் 3:12, 13). ஆரோன் பொற் கன்றுக்குட்டியுடன் பிடிபட்டபோது, அவர் மக்கள்மீது குற்றம் சுமத்தினார் (யாத்திராகமம் 32:22, 23). இஸ்ரவேல் மக்களுக்கு மழை யில்லாமற்போனபோது, ஆகாப் அரசர், தீர்க்கதரிசியான எலியாவின்மீது குற்றம் சுமத்தினார் (1 இராஜாக்கள் 18:17). திருமணமான தம்பதிகளை ஆற்றுப்படுத்துவதில் நான், இந்தப் பண்புகளை மீண்டும் மீண்டும் கண்டு இருக்கின்றேன். கோபமுற்ற ஒரு கணவர் தமது கைமுட்டியைக் கண்ணாடி ஜன்னலின்மீது குத்தி அதை உடைத்தெறிந்து, தமது இரத்தக்களறியான கையையும் மணிக்கட்டையும் உயர்த்திப்பிடித்து, தன் மனைவியிடம், "நீ என்னை என்ன செய்ய வைத்தாய் என்று பார்!" என்று கூறினார்.

இன்றைய நாட்களில் மக்கள், தங்கள் பிரச்சனைகளுக்காகத் தங்கள் பெற்றோர்களை, பள்ளிகளை, சபைகளை, அரசாங்கத்தை, பொதுவாகச் சமூகத்தை, தேவனையும்கூட - தங்களைத் தவிர ஒவ்வொன்றையும் எல்லாவற்றையும் - குற்றப்படுத்துகின்றனர்.[3] இருந்தபோதிலும், நமது சொந்த செயல்களுக்கு நாமே பொறுப்பாளிகளாய் இருக்கின்றோம் என்று வேதாகமம் இன்னமும் போதிக்கிறது; ''பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும், குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன்

குமாரனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை; ... துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" (எசேக்கியேல் 18:20).

கடைசி மூன்று கலசங்கள், எரேமியா 25:14ல் தேவனுடைய கூற்றில் உள்ள உண்மைத்தன்மையை விவரிக்கின்றன: "நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்குத் தக்கதாகவும் பதில் அளிப்பேன்.'' இந்த கலசம், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ள பலர் மனவிருப்பம் இல்லாதிருந்தது பற்றியும் வலியுறுத்துகிறது. அவர்களின் மகிழ்ச்சியற்ற உதாரணத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்; நாம் நமது சொந்த செயல்களுக்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கற்றுக் கொள்ளக் கூடும். ஒரு நாளிலே ''நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:12).

## வேதனைக்காகத் தேவனைக் குற்றப்படுத்துதல் (16:10, 11)

மிக்காயில் வில்காக் என்பவர் "வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள ஒருசில தரிசனங்களே ஐந்தாம் கலசத்தின் தரிசனத்தைக் காட்டிலும் அதிகம் பயபக்தியை ஏவுவதாக உள்ளன"[4] என்று நம்பியுள்ளார். இந்தக் கலசத்தைப் பற்றி இவ்வசனப்பகுதி, இவ்வாறு தொடங்குகிறது: "ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ள மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல்[5] ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது" (வசனம் 10அ). ("ஐந்தாம் கலசம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

ஐந்தாம் எக்காளம் ஊதப்பட்டபோது, அசுத்த ஆவிக்குரிய வெட்டுக்கிளிகள் மனிதர்களை வதைப்பதற்காகப் பாதாளக்குழியில் இருந்து புறப்பட்டு வந்தன. குற்றம் உணர்த்தப்பட்ட மனச்சாட்சியின் வேதனை உட்பட, தனிநபர்மீது பாவத்தின் செயல்விளைவிற்கான அடையாளமாக நாம் இவற்றைக் கண்ணோக்கினோம்.[6] ஒழுக்கரீதியான சீர்கேடு என்பது பாவத்தின் வேதனைமிகுந்த ஒரு விளைவாக உள்ளது என்பதை நாம் வலியுறுத்தினோம்.[7] ஐந்தாம் கலசமும்கூட பாவத்தின் வேதனைமிகுந்த செயல்விளைவை செயல்விளக்கப்படுத்துகிறது, ஆனால் முழு உலக அமைப்பும் பாதிக்கப்பட்டதைவிட அதிகமாகத் தனி நபர்கள் பாதிக்கப்படவில்லை: கலசமானது "மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல்" மற்றும் "அதன் இராஜ்யத்தின்மேல்" ஊற்றப்பட்டது.

13ம் அதிகாரத்தில் வலுசர்ப்பமானது தனது சிங்காசனத்தை மிருகத்திற்குக் கொடுத்திருந்தது (13:2). மிருகம் ஒரு இராஜ்யத்தைக் கொண்டிருந்தது என்று மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது: அது முன்பு, ''உலகத்தின் இராஜ்யம்'' என்று அழைக்கப்பட்ட வட்டாரத்தின்மீது ஆட்சிசெய்தது (11:15). யோவானுடைய நாட்களில், மிருகமானது, டொமீஷியன் என்ற பேரரசனால் தலைமையேற்று நடத்தப்பட்ட ரோமப்பேரரசை அடையாளப்படுத்திற்று என்று நாம் முன்மொழிந்திருந்தோம். ஆகவே, "சிங்காசனம்" மற்றும் "இராஜ்யம்" என்ற

வார்த்தைகள் விசேஷித்த வகையில் ஏற்புடையவைகளாய் காணப்படுகின்றன: டொமீஷியன் என்பவன் ரோமாபுரியில் இருந்த தனது சிங்காசனத்தில் இருந்துகொண்டு, பூமியின் முகமெங்கும் பரவியிருந்த ஒரு இராஜ்யத்தின்மீது ஆளுகை செலுத்திக்கொண்டிருந்தான்.

ஐந்தாம் கலசத்தின் *செயலானது,* ரோமப் பேரரசில் தொடர்ந்து வந்த வரலாற்றின் வெளிச்சத்திலும் ஏற்புடையதாகக் காணப்படுகிறது. எகிப்து நாட்டில் கடைசிக்கு முந்திய வாதையின்போது பூமியில் இருள் மூடியிருந்தபோது (யாத்திராகமம் 10:21-29),[8] செயல்பாடு யாவும் நின்று போயிருந்தன (யாத்திராகமம் 10:23).[9] அதுபோலவே, மிருகத்தின் சிங்காசனத்தின் மீதும் இராஜ்யத்தின் மீதும் இருள் மூடியது என்பது அனேகமாகத் பேரரசில் ஒரு செயல்தடையை அடையாளப்படுத்துவதாக இருக்கலாம்.[10]

இருள் பற்றி நாம் ஒரு பொதுவான நடைமுறைப் பயன்பாட்டையும் ஏற்படுத்த முடியும்: பாவத்தில் ஆழ்ந்திருப்பவர்களின் இருதயங்களும் மனங்களும் இருளினால் மேற்கொள்ளப்படுகிறது என்பது அடையாளத்துவமாக உள்ளது.[11] இயேசு, "மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகின்றனர்" என்று கூறினார் (யோவான் 3:19). சாத்தானின் இராஜ்யம், ''இருளின் அதிகாரம்'' என்று அழைக்கப்படுகிறது (கொலோசெயர் 1:13; நடபடிகள் 26:18ஐயும் காணவும்). நாம் கிறிஸ்தவர்களாகும்போது, தேவன் நம்மை ''அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு'' வரவழைக்கின்றார் (1 பேதுரு 2:9).

நிறைவாக, ஐந்தாம் கலசமானது, நியாயத்தீர்ப்பிற்குப் பின்பு, இழந்துபோகப்பட்டவர்கள் "புறம்பான இருளிலே" (மத்தேயு 22:13) - ஒளியாய் இருக்கின்ற தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து புறம்பே (2 தெசலோனிக்கேயர் 1:9; 1 யோவான் 1:5) - "காரிருளின் குழிக்குள்" (2 பேதுரு 2:4, 17), "அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே" (மத்தேயு 22:13) தள்ளப்படுவார்கள் என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் ஏற்புடைய தன்மையைக் கவனியுங்கள்: உண்மையில், அவர் தேவபக்தியற்றவர்களிடத்தில், "நீங்கள் இருளை விரும்புகின்றீர்கள்; எனவே நீங்கள் இருளைப் பெற்றிருப்பீர்கள் - அது உங்களை மூடுகிற, உங்களைக் குருடாக்குகிற, உங்களை மூச்சுத்திணறச் செய்கிற - என்றென்றைக்கும் உள்ள காரிருளாயிருக்கும்!" என்றே கூறினார்.

மிருகத்தின் இராஜ்யத்தில் இருந்தவர்களை இருளானது எவ்வாறு பாதித்தது? முதலாவது நாம், ''அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு" (வசனம் 10ஆ) என்று வாசிக்கின்றோம். ஒரு வேளை, வேதனை என்பது இருளின் நேரடியான விளைவாக (தங்களின் தலைவர்கள் செயல்வலிவற்றவர்களானார்கள் என்று அறிதலினால் ஏற்பட்ட பெருந்துன்பத்தினால் ஏற்பட்டதாக) இருக்கலாம். ஒரு வேளை, இருள் என்பது, முதல் கலசத்தினால் ஏற்பட்ட கொடிய புண்கள் உட்பட,

*முதல் நான்கு கலசங்களினால் உண்டான வேதனையை அதிகரிக்க மாத்திரம் செய்திருக்கலாம் (வசனங்கள் 2, 11). இரவின் நடுப்பகுதியில் நான் எப்போதுமே மிகவும் மோசமாகத் துன்புறுகின்றேன்.*

*''அவர்கள் ... தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு''[12] என்ற வார்த்தைகள் என்னைத் திகைக்க வைக்கின்றன. புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் காணப்படாத இந்தச் சொல்விளக்கமானது, அநேகமாக இப்போது பழக்கத்தில் இல்லாத ஒரு பொதுச் சொற்றொடராயிருக்கலாம். யாரேனும் ஒருவர் வலிப்புநோய் வந்ததால் தமது நாவைக் கடித்துக்கொள்ளுதல் என்பதே, ஒருவர் தமது நாவைக் கடித்துக்கொள்ளுதல் என்பதாக நான் நேரடியாகப் பார்த்த நிகழ்ச்சியாக உள்ளது. இசிப்பு (வலிப்பு) நோய் ஏற்படும்போது, அதினால் பாதிக்கப்பட்டவர் தமது நாவைக் கடித்துச் சேதப்படுத்திக் கொள்வதில் அல்லது துண்டித்து விடுவதில் இருந்து அவரைப் பாதுகாப்பதற்கு, அவரது உதடுகளுக்கு (பற்களுக்கு) நடுவில் எதையாவது வலிந்து திணிப்பது அவசியமாக உள்ளது. இசிப்பு நோய் கொண்ட ஒருவர் தமது செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதால், 10ம் வசனத்தில் உள்ள "அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு'' என்ற சொல்விளக்கமானது, இந்தத் தனிநபர்கள் துன்புறுதலுடன் "தங்கள் மனநிலையையே இழந்திருந்தனர்" என்று சுட்டிக்காண்பிக்கலாம். எவ்வகையிலும், வேதனையானது மிகுந்த துன்பமாயிருந்தது என்று இது காண்பிக்கிறது!*

*மிருகத்தின் இராஜ்யத்தில் இருந்தவர்கள் "தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும்;[13] பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களே யல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை" (வசனம் 11) என்பதே இருளின் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவாயிருந்தது. அவர்கள் இருளைத் தேர்ந்து கொண்டிருந்தனர், ஆனாலும் அதினிமித்தம் அவர்கள் இன்னமும் தேவனைத் தூஷித்தனர். ஒரு சித்தரிப்பு என் சிந்தைக்கு வருகிறது: ஒரு மனிதர் தமது தலையை ஒரு பையினால் மூடிக்கொண்டார். அவர் அந்த நிலையில் நடந்தபோது, பொருள்களின்மீது தொடர்ந்து மோதினார். கடைசியில், காயம்பட்டு இரத்தம் வழிந்தோடும் நிலையில், அவர் தேவனிடத்தில் தமது கைமுட்டியைக் கோபத்துடன் உயர்த்தி, "தேவனே, நீர் ஏன் என்னைக் காணமுடியாதவனாக்குகிறீர், நீர் ஏன் எனது வாழ்வை வேதனையினால் நிரப்புகிறீர்?" என்று கூக்குரலிட்டார்.*

*நம்மையே நாம் இருளிலும் வேதனையிலும் இருப்பவர்களாகக் காணும்போது, நாம் தேவனைக் குற்றப்படுத்தாதிருப்போமாக. மாறாக, ''நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'' (யோவான் 8:12) என்று கூறியவரிடத்திற்கு தப்பியோடுவோமாக.*

## பிரச்சினைகளுக்காகத் தேவனைக் குற்றப்படுத்துதல் (16:12-17)

*''ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ள ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்து*

*வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று[14]" (வசனம் 12). ("ஆறாம் கலசம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*ஆறாம் எக்காளம் ஊதப்பட்டபோது, ஐப்பிராத்து நதிக்கரையில் கட்டிவைக்கப்பட்டிருந்த நான்கு தூதர்கள் அவிழ்த்துவிடப்பட்டனர், அவர்கள் ஒரு பெரிய இராணுவமாயினர் (9:13-19).[15] அந்த எக்காளத்தைப் பற்றி நாம் படிக்கையில், ஐப்பிராத்து நதியானது ரோமாபுரிக்கும் அவர்களுக்குக் கிழக்கில் இருந்த அவர்களின் விரோதிகளுக்கும் இடையில் ஒரு இயற்கையான தடையாய் இருந்தது என்று நாம் குறிப் பிட்டிருந்தோம்.[16] அதே பொதுவான கருத்தானது ஆறாம் கலசத்திலும் தக்கவைக்கப்பட்டுள்ளது: ஐப்பிராத்து நதியானது வற்றிப்போனது என்பது, அந்தத் தடை நீக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காண்பித்தது. இவ்விதமாக, ''சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு''[17] அவர்கள் தங்களின் வெற்றிகொள்ளும் படைகளுடன் பாய்ந்தோடி வருவதற்கு வழி திறக்கப்பட்டது. மீண்டுமாக நமக்கு, வெளியில் இருந்து வந்த படையெடுத்தல் என்பது ரோமாபுரிக்கு வீழ்ச்சியைக் கொண்டு வந்த காரணிகளில் ஒன்றாயிருந்தது என்பது நினைவூட்டப்படுகிறது.*

*இருப்பினும் நாம், ஆறாம் கலசத்தின் நடைமுறைப் பயன்பாட்டை ரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சியுடன் சுருக்கப்படுத்திக்கொள்ள வேண்டி அவசியம் இருப்பதில்லை. தேவன் தமது சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தி ருப்பவர்களைச் சுற்றி எப்போதும் ஒரு தடையை வைத்துக் காத்துக் கொள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார்: அவர் "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல்'' இருக்கின்றார் (1 கொரிந்தியர் 10:13). தேவபக்தியற்றவர்களுக்கு இதுபோன்ற வாக்குத்தத்தம் எதுவும் இருப்பதில்லை. ஒரு மனிதன் கர்த்தரை எதிர்க்கும்போது, அந்தத்தடைகள் கீழே விழுகின்றன - அதன் விளைவுகள் துன்பகரமானவைகளாய் உள்ளன.[18]*

*ஐந்தாம் கலசத்திற்கு பின்பு நாம், மனித குலத்தின் பதில்செயலைக் கண்டோம். இப்போது, ஆறாம் கலசத்திற்குப் பின்பு, பிசாசு மற்றும் அவனது கூட்டாளிகள் ஆகியோரின் பதில்செயலை நாம் காணுகின்றோம்:*

> *அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின்[19] வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள்[20] புறப்பட்டுவரக் கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனு டைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. ... அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான் (வசனங்கள் 13, 14, 16). ( "தவளைகளைப் போன்ற மூன்று அசுத்த ஆவிகள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இவ்வசனங்கள், "சாத்தானின் சூழ்ச்சி அறையில் இருந்து வெளிவந்த*

*எதிர்த்தாக்குதலின்"*[21] திட்டத்தை வரைக்குறிப்பிடுகின்றன. பிசாசானவன் தேவனுடைய நியாயத்தீர்ப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை; அவன் "அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படும்" (20:10) வேளை வரையிலும் கலகம் செய்பவனாகவே இருப்பான்.

இவ்வசனப்பகுதியானது, "எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்தை" (வசனம் 16) அறிமுகப்படுத்துகிறது. முன்னதாக நாம், "666" என்ற அடையாளக்குறி எண்ணைப் பற்றி விளக்குவதற்கு அதிக நேரத்தை எடுத்துக்கொண்டோம், இந்த எண்ணைச் சுற்றி மேம்படுத்தப்பட்டுள்ள அர்த்தமற்ற சில கருத்துக்களை நாம் ஆராய்ந்து பார்த்தோம். "666" என்ற எண்தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள வினோதமான ஒவ்வொரு கருத்திற்கும், அர்மகெதோனைப் பற்றி ஒரு டஜன் கருத்துக்கள் முன் அமைக்கப்பட்டுள்ளன.

"அர்மகெதோன் யுத்தம்" என்ற கருத்தானது, மனிதகுலத்தின்[22] மனநிலையில் மிகவும் ஆழமாக "கடைசியான மகா யுத்தம்" என்பதாக ஊன்றப்பட்டிருக்கிறது. இதனால் நாம், 12முதல் 16வரையிலான வசனப்பகுதிக்கு மாத்திரம் ஒரு விசேஷித்த பாடத்தைக் கொண்டிருக்க வேண்டியதாக உள்ளது. இருப்பினும் , இவ்வேளையில் இவ்வசனங்கள் 16ம் அதிகாரத்தின் சந்தர்ப்பப்பொருளில் எவ்வாறு பொருந்துகின்றன என்று காண்பதற்குச் சில குறிப்புரைகள் அவசியமாக உள்ளன.

இந்தத் தரிசனமானது, கர்த்தருடைய விரோதிகள், கர்த்தரை எதிர்த்து நிற்பதற்குத் தங்கள் சக்திகளைச் சேர்த்துக் குவிப்பதைச் சித்தரிக்கிறது. அவர்கள் செய்வது ஒவ்வொன்றும் தேவனுடைய முழுமையான திட்டத்துடன் பொருந்தின என்பதை அவர்கள் உணர்ந்தறியவில்லை. இது முதலில், நமக்கு அவர்கள் ஒன்றுகூடி "சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது" என்று கூறப்படுவதில் தெளிவாகிறது (வசனம் 14ஆ). அது தங்களுடைய யுத்தம் என்று அவர்கள் நினைத்தனர், ஆனால் உண்மையில் அது தேவனுடைய யுத்தமாக இருந்தது - அவர் அந்த வேளையைக் கட்டுப்பாடு செலுத்தினார் . "தேவனுடைய மகாநாள்" என்பது அவர் நியாயத்தீர்ப்பில் வரும் நாளைக் குறிக்கிறது (2 பேதுரு 3:12).[23]

**ஒரு இடமல்ல**

அவர்கள் செய்த ஒவ்வொன்றும் தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது என்பதற்கு, அந்தச் சேனைகள் குவிந்த இடம் என்பது இரண்டாவது குறிப்பாக உள்ளது: "அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்" (வசனம் 16). "அர்மகெதோன்" என்னப்படுவது "மெகிதோவின் மலை" என்பதை அர்த்தப்படுத்துகிறது என்று பெரும்பான்மையான கல்விமான்கள் ஒப்புக்கொள்கின்றனர். புரூஸ் மெட்செஜர் என்பவர் சுட்டிக்காண்பிக்கிறபடி, "இருப்பினும், 'மெகிதோ மலை' என்று ஒன்றில்லை என்பது இதில் உள்ள சிரமமாக இருக்கிறது."[24] பழைய ஏற்பாட்டில் மெகிதோவைப் பற்றி அதிகமாகக் கூறப்படுகிறது, ஆனால் மெகிதோ

மலையைப் பற்றி ஒன்றும் கூறப்படுவதில்லை. எழுத்தாளர்கள், பலஸ்தீன தேசத்தின் ஏதாவது ஒரு இடத்தில் ‘‘மெகிதோ மலை’’ என்று அழைக்கப்பட்ட ஒரு இடம் இருந்திருக்க வேண்டும் என்று போராடுகின்றனர், ஆனால் அப்படிப்பட்ட இடம் ஒன்றும் இருந்ததில்லை.

“மெகிதோ மலை” என்று அழைக்கப்படும் இடம் ஒன்றை, நாம் இந்த உலக உருண்டையின்மீது காண இயலாது என்ற உண்மையானது, இந்தச் சொற்றொடரைப் பற்றிய பரிசுத்த ஆவியானவரின் பயன்பாடு குறித்த குறிப்பு ஒன்றை நமக்குத் தரக்கூடாதா? யோவான், புவியியல் ரீதியான இடத்தைப் பற்றியல்ல, ஆனால் ஒரு கருத்தைப் பற்றி எழுதினார். “திரிபு” என்ற கருத்தைப் பற்றி நினைவுகூருங்கள். பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின விசேஷத்தில் பழைய ஏற்பாட்டின் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தி, ஆனால் அதை மாற்றியிருக்கும்போது (அது ஒரு ‘‘திரிபை’’ தருகிறது). அது, வெளிப்படுத்தின விசேஷமானது, பழைய ஏற்பாட்டில் பேசப்பட்ட அந்த விஷயத்தை எடுத்துரைக்காமல், அது தொடர்பான ஒரு கருத்தை எடுத்துரைக்கிறது என்று நம்மை அறியச் செய்கிறது.

மெகிதோ என்ற கருத்தில் ஒரு திரிபுடன் நாம் எந்தக் கருத்தை ஆதாயப்படுத்திக்கொள்ள முடியும்? மெகிதோ என்பது முக்கியமான யுத்தங்கள் நடைபெற்ற இடம் என்பதாகக் குறிப்பிடப்பட்டது. குறிப்பாக அது, தேவனுடைய சித்தத்தின்படி செய்தவர்கள் வெற்றிகொண்டதும், தேவனுடைய சித்தத்திற்கு முரணானவர்கள் தோல்வியடைந்ததுமான இடமாக இருந்தது. (அந்த வாக்கியத்தை மறுபடியும் வாசியுங்கள்; அதை உங்கள் மனதில் பதியவைத்துக்கொள்ளுங்கள்.) 16ம் வசனத்துடன் தொடர்புடைய வகையில் இதன் தனிச்சிறப்பை ஆழ்ந்து சிந்தியுங்கள்: ‘‘அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.’’ தவளைகள் தங்களால் வெற்றிகொள்ள இயலாத ஒரு இடத்தில் தங்கள் படைகளை ஒன்றுகூட்டின - அங்கே அவைகள் தொடக்கம் முதலாகவே வீழ்ச்சியைக் கண்டன!

**ஒரு நிகழ்ச்சியல்ல**

இந்தக் காட்சியமைவு ஒரு இடமல்ல என்பதுடன் மாத்திரமல்ல; இந்த நிகழ்வானது ஒரு நிகழ்ச்சியல்ல என்பதாகவும் இருந்தது. அங்கு “யுத்தம்” என்று ஒன்றும் நடைபெறவில்லை. பிசாசின் சேனை ஒன்றுகூடிய உடனே, ‘‘ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ‘ஆயிற்று’ என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது” (வசனம் 17). குண்டுகள் பொழியப்படவில்லை, ஏவுகணைகள் ஏவப்படவில்லை, தேவன், “ஆயிற்று” என்று உரைத்தார், அது முடிந்து போயிற்று.

“அர்மகெதோன் யுத்தம்’’ பற்றி வேதாகமம் ஒன்றும் அறிவதில்லை! 13முதல் 16வரையுள்ள வசனங்கள், தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் தடைப்படுத்துவதற்கான பிசாசின் தொடர்ந்த முயற்சிகளாக இருந்தன, இருக்கின்றன - இவைகள் தோல்வியைத் தழுவும்

*முயற்சிகளாக இருக்கின்றன.*

*13முதல் 16வரையுள்ள வசனப்பகுதியை விட்டு நாம் நீங்கிச் செல்லும் முன்பு, நாம் இன்னும் ஒரு சத்தியத்தை வலியுறுத்துவோமாக: தவளைகளின் ஆளெடுக்கும் முகாமின் மத்தியில், கர்த்தர் ஒரு விளக்கத்துடன் இடையிட்டார் (இது இடையிடுதலில் உள்ள இடையிடுதலாக இருக்கிறது): "('இதோ, திருடனைப்போல்[25] வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன்[26] பாக்கியவான்'[27])" (வசனம் 15).*

*இவ்வசனம் 13, 14மற்றும் 16ம் வசனங்களினுடைய சிந்தனை ஓட்டத்தை இடைமறிப்பதால், இது "தவறான இடத்தில்" உள்ளது என்று விடுதலையியல் விளக்கவுரையாளர்கள்[28] முறையிடுகின்றனர். இவர்கள், 15ம் வசனத்தை, இவ்வசனப்பகுதியின் இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கோ அல்லது நீக்கிப்போடுவதற்கோகூட தயங்குவதில்லை. இருப்பினும், பரிசுத்த ஆவியானவர் தமது கூற்றை தாம் விரும்புகின்ற இடத்தில் இடுகின்றார், மற்றும் அவ்விடத்தில் அது நேர்த்தியாகப் பொருந்துகிறது. பின்வருவதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: பிசாசின் சக்திகள் யாவும் ஒரு இடத்தில் ஒன்று கூடுதல் என்ற கருத்து (வசனங்கள் 13, 14) யோவானின் வாசகர்களுக்கு எச்சரிக்கையூட்டுவதாக இருந்திருக்க வேண்டும். இவ்விதமாக இயேசு, அவர்களின் எதிராளிகளை இடித்துப்போடுவதற்காகவே தாம் வந்துள்ளதை அவர்கள் அறிய அனுமதித்து, அதை மறுஉறுதிப்படுத்துவதற்காகச் சற்றே தாமதித்தார்.[29] எனது மகள்களில் ஒருத்தி, அறுவைச் சிகிச்சைச் செயல்முறையில் எதிர்பார்க்க வேண்டியிருப்பது என்ன என்பதை நான் அவளுக்கு விளக்கியுரைத்த ஒரு வேளையானது எனது நினைவுக்கு வருகிறது. அவள் கலக்கம் கொண்டவளாகக் காணப்பட்டபோது, அந்த அறுவைச் சிகிச்சை நேரம் முழுவதிலும் நான் அவளுடன் இருப்பேன் என்று அவளுக்கு உறுதிப்படுத்தத் தாமதித்தேன். பின்பு நான் எனது விளக்கத்தை முடித்தேன்.*

*பிரச்சனையைக் குறித்து கவனம் மேற்கொள்வதற்கு இயேசு என்ன செய்வார் என்பதைக் கூறியதோடு மாத்திரம் அவர் நின்றுவிடவில்லை. அவர் தம்மைப் பின்பற்றுபவர்கள் என்ன செய்துகொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவர் கூறினார்: (1) அவர்கள் ஆவிக்குரிய வகையில் விழித்திருக்க வேண்டியது அவசியமாயுள்ளது, (2) அவர்கள் ஆவிக்குரிய வகையில் உடையணிந்திருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதுபோன்ற அறைகூவல்கள், ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் தரப்பட்டிருந்தன: சர்தையில் இருந்த சபைக்கு இயேசு, "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; ... நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (3:2, 3) என்று கூறினார். லவோதிக்கேயாவில் இருந்த சபைக்கு அவர், "... உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், ... உனக்கு ஆலோசனை*

*சொல்லுகிறேன்" (3:18) என்று ஆலோசனை தெரிவித்தார். கர்த்தருடைய செய்தியின் இருமடங்கு அறைகூவல்கள் தெளிவாக உள்ளது: அவரது மறுவருகைக்காக எல்லா வேளைகளிலும் தயாராய் நிலைத்திருங்கள்![30]*

## தண்டனைக்காகத் தேவனைக் குற்றப்படுத்துதல் (16:17-21)

*பிசாசின் சக்திகள் தங்களால் வெற்றிகொள்ள இயலாத ஒரு இடத்தில் (அர்மகெதோன்) ஒன்றுகூடும்படிக்குக் கட்டாயப்படுத்தப்பட்ட அறிவிப்பிற்குப் பின்பு, ஏழாம் தூதன் தனது கலசத்தை ஊற்றும் வேளையாயிருந்தது: "ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்" (வசனம் 17அ). ("ஏழாம் கலசம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இந்தக் கலசம் "ஆகாயத்தில்" ஊற்றப்பட்டது என்பதில், குறிப்பிட்ட எழுத்தாளர்கள் முக்கியத்துவத்தைக் காணுகின்றனர். சிலர், நாம் சுவாசிக்கின்ற காற்றின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றனர்: தண்ணீரானது இரத்தமாய் மாறியபோது (இரண்டாம் மற்றும் மூன்றாம் கலசங்கள்), அது மோசமானதாயிருந்தது, ஏனென்றால் மனிதர்கள் தண்ணீர் இல்லாமல் ஒரு சில நாட்கள் மாத்திரமே வாழமுடியும்; இதற்கு மறுபுறத்தில், மனிதர்கள் காற்றில்லாமல் ஒரு சில நிமிடங்களே வாழமுடியும். மற்றவர்கள், ஏழாம் கலசமானது "ஆகாயத்து அதிகாரப்பிரபு" (எபேசியர் 2:2) என்று அழைக்கப்படும் பிசாசின் மீதான நேரடித் தாக்குதல் என்ற வகையில் "ஆகாயத்தின்"மீது இலக்கு வைக்கப்பட்டது என்று நம்புகின்றனர். இந்தச் சொற்றொடரில் விசேஷித்த முக்கியத்துவம் எதுவும் இல்லாதிருக்கலாம்: நாம் ஆகாயவெளி என்று அழைக்கும் இடத்தில் கலசம் ஊற்றப்பட்டது, இவ்விதமாக "பாதுகாப்பிற்குத் துளிகூட வாய்ப்பற்ற நிலையில் எல்லா இடங்களிலும் தேவகோபமானது மனிதர்கள் மீது பாய்ந்து பெருகிற்று."[31]*

*அது நடந்தபோது, "பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து[32]: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது" (வசனம் 17ஆ). 1ம் வசனத்தில் போலவே, இந்தக் குரல் தேவனுடையதாக இருக்கவேண்டும்.[33] "ஆயிற்று" என்பது நிறைவு வினைச் சொல்லில் உள்ள ஒரு தனிப்பட்ட கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது: இவ்வார்த்தை முழுமைபெற்ற செயலைக் குறிக்கிறது.[34] தேவன் தாம் செய்வதாகக் கூறியதை நிறைவேற்றியிருந்தார். வெளிப்படுத்தின புத்தகத்தில் இன்னும் ஆறு அதிகாரங்கள் எஞ்சியுள்ளன, ஆனால் இப்புத்தகத்தின் எஞ்சியுள்ளபகுதியில் பெரும்பான்மையானவை, அடிப்படையில், 16ம் அதிகாரத்தின் கடைசி வசனங்களின் விரிவாக்கமாகவும் விளக்கமாகவும் உள்ளது.*

*தெய்வீக அறிவிப்பைத் தொடர்ந்து தெய்வீக வல்லமையின் காட்சி விளக்கம் உண்டாயிற்று:[35] "சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி*

யுண்டானதில்லை"[36] (வசனம் 18).

மகாபாபிலோன் தான் பூமியதிர்ச்சியின் திட்டவட்டமான இலக்காக இருந்தது (இது அடுத்த அதிகாரத்தில் ரோமாபுரி நகரம் என்று அடையாளப்படுத்தப்படுவதாகக் காணப்படுகிறது;[37] 17:9, 18ஐக் காணவும்). பாபிலோனின் வீழ்ச்சி பற்றி 14:18ல் அறிவிக்கப்பட்டிருந்தது; இவ்விடத்தில் நாம், "அப்பொழுது மகா நகரம் மூன்றுபங்காக பிரிக்கப்பட்டது" (வசனம் 19அ) என்ற வார்த்தைகளில் தொடங்கி, அந்த வீழ்ச்சியைப் பற்றிய ஒரு சுருக்கமான விவரிப்பைக் கொண்டிருக்கின்றோம். ''மூன்று'' என்பது தெய்வீகத்துவத்தின் எண்ணாக உள்ளது. "மூன்றுபங்காகப் பிரிக்கப்பட்டது" என்பது தெய்வீக நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது.[38]

ரோமாபுரியானது மற்றவர்களைப் பாதிக்காமல் வீழ்ச்சியடைய முடியாதிருந்தது. ரோமாபுரி நகரமானது உலகத்தின் எஜமானியாக இருந்தது; பெரும்பாலான மனிதர்களின் எதிர்காலமானது அந்த நகரத்தின் எதிர்காலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தது. இவ்விதமாக, பாபிலோன் அழிக்கப்பட்டபோது, "புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன" என்று நாம் வாசிக்கின்றோம் (வசனம் 19ஆ).

தேவனுடைய கோபம் இவ்வாறு ஊற்றப்படுவதைத் தூண்டியது எது? பாபிலோனும் அதன் கூட்டாளிகளும், தேவனை ஒப்புக்கொள்ளவும் அவருக்கு மகிமை செலுத்தவும் மறுத்திருந்தனர். ஆகையால், "மகாபாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக[39] நினைப் பூட்டப்பட்டது" (வசனம் 19இ). லியோன் மோரீஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> இந்தப்புத்தகத்தில் வேறு எவ்விடத்திலும், அவரது உக்கிரமான கோபாக்கினையாகிய[40] மதுவுள்ள பாத்திரம் என்பதுபோன்று வலிவுள்ள சொல்விளக்கம் தரவழைக்கப்பட்டிருப்பதில்லை. பாபிலோன் என்பது, சர்வ வல்லமையும் சகல பரிசுத்தமும் நிறைந்த தேவனிடத்தில் இருந்து, கற்பனை செய்யக்கூடிய வகையிலான பெரும்பாலும் இருதயப்பூர்வமான எதிர்ப்பைப் பெற வேண்டியதாக உள்ளது என்ற கருத்தை யோவான் சந்தேகத்திற்கு இடமின்றி நமக்கு விட்டுச் செல்கின்றார்.[41]

20ம் வசனத்தில் நாம், தேவனுடைய வல்லமை பற்றி இன்னொரு சொல்விளக்கத்தைக் கொண்டுள்ளோம்: "தீவுகள் யாவும் அகன்றுபோயின, பர்வதங்கள் காணப்படாமற்போயின" (6:14ஐக் காணவும்).

21ம் வசனத்தில் அடையாளத்துவமானது, 18 மற்றும் 20ம் வசனங்களில் காணப்படுவதைப் போன்றதாகவே உள்ளது, ஆனால் இது வெளிப்படுத்தின விசேஷத்தில் இதற்குமுன் காணப்பட்டிராத உருவகத்தைப் பயன்படுத்துகிறது - இது எகிப்தில் ஏழாவது வாதையின் எஞ்சிய உருவகமாக உள்ளது (யாத்திராகமம் 9:18-35): ''தாலந்து நிறையான[42] பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது" (வசனம் 21அ). கோல்ஃப் பந்து அளவிலான ஆலங்கட்டியையும் பேஸ்பால்

பந்து அளவிலான ஆலங்கட்டியையும் நான் கண்டிருக்கின்றேன்; ஆனால் இந்த உலகமானது, நூறுபவுண்டு எடையுள்ள (சுமார் 45கிலோ) ஆலங்கட்டியை ஒருபோதும் அனுபவித்து உணர்ந்திருப்பதில்லை. (நம்மில் சிலர், நூறுபவுண்டுக் கட்டி என்ற அளவில் பனிக்கட்டி விற்கப்பட்டதை நினைவில் கொண்டுவருகின்றோம். அந்தப் பெரிய பனிக்கட்டி, என் தலையின்மீது போடப்படுவதை நான் விரும்பமாட்டேன்!)

"[பழைய ஏற்பாட்டில்] தேவன் தமது மக்களின் விரோதிகளைக் கல்மழையைக் கொண்டு திரும்பத் திரும்பத் தண்டித்தார் ... . கல்மழை என்பது தெய்வீக வஞ்சம் தீர்த்தலின் படைக்கலத்தின் பகுதியாக இருந்தது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது."[43] 21ம் வசனமானது எதிர்காலத்தில் வானத்திலிருந்து நேரடியான அர்த்தத்தில் ஒரு நூறு பவுண்டு எடையுள்ள கல்மழை விழும் என்று முன்னுரைப்பதில்லை. மாறாக இது, பாவமானது தேவனை எவ்வளவாக மிகமுனைப்பான வகையில் மகிழ்ச்சியற்றுப் போகச் செய்கிறது என்பதை விவரிக்கிறது!

மீண்டுமாக நாம், பாதிக்கப்பட்டவர்களிடத்தில் இருந்து பின்வரும் வினோதமான பதில்செயலைக் காணுகின்றோம்: "அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடியதாயிருந்தது" (வசனம் 21ஆ). அவர்கள் தங்கள் தலைகளின்மீது தாங்களே இடர்ப்பாட்டைக் கொண்டுவந்திருந்தனர் (சங்கீதம் 7:16), ஆனால் அவர்கள் இன்னமும் தேவனைக் குற்றப்படுத்தினர்!

## முடிவுரை

16ம் அதிகாரத்தில் இருந்து நாம் வேறு எதையும் கற்றிருக்கவில்லை என்றாலும், நமது பிரச்சனைகளுக்காகத் தேவனை நாம் குற்றப்படுத்தக்கூடாது என்பதைக் கற்றிருக்க வேண்டும். நமது பிரச்சனைகளில் சில, பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்வதின் விளைவாக ஏற்பட்டவைகளாய் உள்ளன (ஆதியாகமம் 3:17-19). சில பிரச்சனைகள், பாவம் நிறைந்த மனிதர்களுடன் இணைவு கொள்வதன் விளைவாக ஏற்பட்டவைகளாய் உள்ளன (ரோமர் 14:7). சில பிரச்சனைகள், தனிப்பட்ட மோசமான முடிவுகளின் விளைவாகவும்கூட இருக்கலாம் (கலாத்தியர் 6:7). நமது வாழ்வில் இடர்ப்பாடுகள் நிரப்பப்படுதல் என்பது எவ்வாறு நடப்பினும், அதற்கு நாம் தேவனை மதியீனமாய்க் குற்றப்படுத் தாதிருப்போமாக (யோபு 1:22ஐக் காணவும்). "எவரொருவரையும் அழுத்தத்தின் காரணமாக ... 'தேவன் என்னைத் தடுக்கிவிழப்பண்ண முயற்சி செய்கின்றார்' என்று கூற அனுமதிக்காதீர்கள். தேவன் ... எவருடைய வழியிலும் தீமையை வைப்பவரல்ல."[44] மாறாக, நாம் நமது சிரமங்களினூடே கடந்து செல்வதற்குத் தேவன் மீது நம்பிக்கைவைத்து, அவற்றிலிருந்து கற்றுக்கொள்வோமாக.

எல்லாவற்றிற்கும் மேலாக, மனந்திரும்ப மறுத்திருந்த அவர்களைப் போல் நாம் இருக்கக்கூடாது. நாம் நமது இருதயத்தை மென்மையாகக் காத்துக்கொள்வோமாக, நமது வாழ்வைத் தொடர்ந்து பரிசோதித்துப்

*பார்ப்போமாக (2 கொரிந்தியர் 13:5). அங்கு நாம் பாவத்தைக் கண்டறியும்போது, நாம் உடனே மனந்திரும்பி தேவனிடத்திற்குத் திரும்புவோமாக (2:5, 16, 22; 3:3, 19; 9:20, 21ஐக் காணவும்). இவ்வாறுதான் நாம் விழிப்புள்ளவர்களாய்/கவனமுள்ளவர்களாய் நிலைத்திருக்க முடியும். இவ்வாறுதான் நாம் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமானவர்களாய் நிலைத்திருக்க முடியும் (16:15).*

*"வாரும் ஆண்டவராகிய இயேசுவே" (22:20ஆ) என்று நீங்கள் உற்சாகத்துடன் கூற இயலவில்லை என்றால், நீங்கள் செய்ய வேண்டிய யாவற்றையும் செய்யுங்கள்[45] - மற்றும் உங்கள் இருதயம் கடினமாகும் முன்பு அவற்றைச் செய்துவிடுங்கள். முனைவர் ஜார்ஜ் ஸ்வீட்டிங் என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *பல ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் குடும்பம் நயாகரா நீர்வீழ்ச்சிக்குச் சென்றிருந்தது. அது ஒரு வசந்தகாலமாக இருந்தது, பனிக்கட்டியானது நதியில் பாய்ந்தோடி வந்தது. நீர்வீழ்ச்சியை நோக்கிப் பாய்ந்தோடிவந்த பெரிய பனிக்கட்டிகளை நான் கண்ணோக்குகையில், அந்தப் பனிக்கட்டிகளுக்குள், இறந்துபோன மீன்களின் உடல்கள் இருந்ததை நான் பார்க்க முடிந்தது. மீன்களைத் தின்று கொண்டு ஸீகல் என்ற பறவைகள் ஆயிரக்கணக்கில் நதியின்மீது மிதந்துகொண்டிருந்தன. அவைகள் நீர்வீழ்ச்சியின் முனைப்பகுதிக்கு வருகையில், அவற்றின் இறகுகள் வெளியே எட்டிப் பறந்து, அவை வீழ்ச்சியில் இருந்து தப்பித்துக்கொள்ளும்.*
>
> *ஒரு ஸீகல் பறவையானது தாமதமாய்க் காணப்பட்டதைக் கவனித்தேன் ... . அது மீன் ஒன்றின் இறந்த உடலை ஆக்கிரமித்திருந்தது, அது கடைசியில் நீர்வீழ்ச்சியின் முனைக்கு வந்தபோது, அதன் பலம் நிறைந்த இறகுகள் வெளியே எட்டின. அந்தப் பறவை சிறகடித்துச் சிறகடித்து, அந்த பனிக்கட்டியைத் தண்ணீரில் இருந்து வெளியே தூக்கவும் செய்தது, ... ஆனால் அதன் நகங்கள் பனிக்கட்டிக்குள் உறைந்துபோகும் அளவுக்கு அது வெகுநேரம் தாமதித்திருந்தது. பனிக்கட்டியின் எடை மிகவும் கனமாய் இருந்தது, அந்த ஸீகல் பறவையானது பாதாளத்திற்குள் அமிழ்ந்துபோயிற்று.[46]*

*தேவனுக்கு கீழ்ப்படிவதற்கு மிகவும் தாமதமாகும்வரை காத்திருக்காதீர்கள்!*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்புகள் பின்வருமாறு: "தேவன் சீற்றம் அடையும்போது," "தேவன் பரியாசம் பண்ணப்படுவதில்லை," "தேவனுடைய நீண்ட நினைவு," "ஆகாயத்தில் இருந்து பயங்கரம்."*



*குறிப்புகள்*

[1]W. B. West Jr., *Revelation Through First-Century Glasses*, ed. Bob Prichard (Nash-

ville: Gospel Advocate Co., 1997), 108. [2]இந்தப் பெயர்ச்சொல் வடிவமானது, ''புண்படுத்துதல்'' என்பதற்கான வார்த்தையை ''பேசுதல்'' என்பதற்கான வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட கிரேக்கக் கூட்டு வார்த்தையாக உள்ளது. [3]நாம் யாவரும் நமது வாழ்வில் பல்வேறு மாறுபட்ட காரணிகளினால் பாதிக்கப்படுகின்றோம் என்பதையும், நம்மை வாதிக்கிற ஒவ்வொரு இடர்ப்பாட்டிற்கும் எப்போதும் நாமே தனிப்பட்ட வகையில் பொறுப்பாக இருப்பதில்லை என்பதையும் புரிந்துகொண்டிருக்கின்றேன். இருப்பினும், நமது வழியில் வரும் இடர்ப்பாட்டிற்கு நாம் எவ்வாறு பதில்செயல் செய்கின்றோம் என்பதற்கு நாமே பொறுப்பாய் இருக்கின்றோம் என்ற உண்மை இன்னமும் நிலைத்துள்ளது, மற்றும் ஒரு இடர்ப்பாடானது நமது கழுத்தைச் சுற்றி இறுக்கும் ஒரு இயந்திரக் கல்லாகிறதா அல்லது மேன்மையானவற்றிற்கு நடக்கப்பயன்படும் படிக்கல்லாகிறதா என்பதற்கு நாமே பொறுப்பாளிகளாய் இருக்கின்றோம். "எனக்கு ஐயோ'' என்று கூவுகிற ஜனக்கூட்டத்தின் காட்சியானது பக்திவிருத்தியற்றதாக உள்ளது. தேவன்மீது விசுவாசம் கொண்டுள்ள ஒருவர், அவர் (தேவன்) "சகலமும் நன்மைக்கேதுவாக நடத்துகின்றார்'' (ரோமர் 8:28) என்று அறிகின்றார். உண்மையான கிறிஸ்தவர், தமது அறைகூவல்கள் எப்படிப்பட்டவைகளாய் இருந்தாலும், "என்னைப்பெலப்படுத்துகிற கிறிஸ்து இயேசுவினால் எதையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு" (பிலிப்பியர் 4:13) என்று கூற முடியும். [4]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 147. [5]KJV வேதாகமத்தில் ''seat'' என்றுள்ளது, ஆனால் இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தையானது *thronos* என்பதன் ஒரு வடிவமாக உள்ளது. "வெளிப்படுத்தின விசேஷம், 3'' என்ற புத்தகத்தில் ''பாவத்தின் சுய அழிவுத்தன்மை" என்ற பாடத்தில் காணவும். [7]எக்காளங்கள் மற்றும் கலசங்கள் ஆகியவற்றிற்கு இடையிலான நெருங்கிய உறவின் காரணமாக, ரோமப் பேரரசிற்குள்ளாக நிலவிய ஒழுக்கச் சீர்குலைவானது, நாட்டின்மீது வந்த ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கரீதியான இருள்தன்மைக்கும், கடைசியில் பேரரசின் வீழ்ச்சிக்கும் பிரதான காரணியாக இருந்தது என்ற கருத்து ஏற்படுத்தப்பட முடியும். ரோமப்பேரரசிற்கு வீழ்ச்சியை ஏற்படுத்திய பின்வரும் மூன்று காரணிகளை சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள்: இயற்கைப் பேரழிவு, உள்ளான சீரழிவு மற்றும் வெளியிலிருந்து படையெடுப்பு. [8]எகிப்தில் ஏற்பட்ட காரிருளினால் இஸ்ரவேல் மக்கள் பாதிக்கப்படவில்லை (யாத்திராகமம் 10:23). அதுபோலவே, வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு வாதைகளில் இருந்தும் கிறிஸ்தவர்கள் விதிவிலக்குப் பெற்றனர் (வசனம் 2ஐக் காணவும்). [9]முற்றான இருளில் இருத்தல் என்பது எவ்வாறு உணரப்படும் என்பது பற்றியும் அதில் ஒருவர் எவ்வாறு வழக்கத்திற்கு மாறானவர் ஆகக்கூடும் என்பது பற்றியும் விவரிப்புகளைத் தருவதற்கு நீங்கள் விரும்பலாம். எனது விவரிப்புகள், கார்ல்ஸ்பேடு குகைக்குள் நான் இருமுறை பயணம் செய்திருந்த நிகழ்ச்சிகளில் இருந்து வருவதாயிருக்கும். [10]முற்றான இருள் என்பது, ரோமப்பேரரசை எவ்வளவு சீரழிப்பதாயிருக்கும் என்பதைப் புரிந்துகொள்வதற்கு, நம் நாடு முழுவதும் திடீரென்று மின்விநியோகம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

[11]யோவான் 8:12; 12:46; ரோமர் 2:19; 13:12; 1 கொரிந்தியர் 4:5; 2 கொரிந்தியர் 6:14; எபேசியர் 5:8, 11; 6:12; 1 தெசலோனிக்கேயர் 5:5; 1 யோவான் 1:6; 2:11 ஆகிய வசனங்களைக் காணவும். [12]"கடித்துக் கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "மெல்லுதல், கடித்தல், உண்ணுதல்" என்று அர்த்தப்படும் வேர்வார்த்தை ஒன்றில் இருந்து வருகிறது. [13]அவர்களின் பல்வேறு "வேதனைகளில்" ஒன்றே ஒன்று மாத்திரம் தனிப்படக்குறிப்பிடப்பட்டுள்ளது: முதலாம் கலசம் ஊற்றப்பட்டபோது அவர்கள் பெற்றுக்கொண்ட புண்கள். அவர்கள் இரண்டாம்,

*மூன்றாம் மற்றும் நான்காம் கலசங்களில் இருந்தும் வேதனையைப் பெற்றிருந்திருக்கலாம். மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் (அவர்கள் வெளிப்படையாய் அறிவித்திருந்த அற்புத வல்லமைகள் இருந்திருந்தும்கூட), அந்தப் புண்களைக் குணமாக்க இயலவில்லை என்பதைக் கவனியுங்கள்.* [14]*"பழைய ஏற்பாட்டில், தேவனுடைய பலத்த செயலானது, செங்கடல்* [*யாத்திராகமம் 14:21*], *யோர்தான்* [*யோசுவா 3:16, 17*], *மற்றும் தீர்க்கதரிசனங்களில் பலமுறை* [*ஏசாயா 11:15; எரேமியா 51:36; சகரியா 10:11*] *ஆகியவற்றில் செய்தது போல், தண்ணீரை உலரச்செய்தலுடன் இணைவு கொண்டிருந்தது"* (Leon Morris, *Revelation,* rev. ed., The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987], 191). *பல எழுத்தாளர்கள், பாபிலோன் நகரத்தைக் கோரேஸ் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டபோது, அவன் ஐப்பிராத்து நதியின் தண்ணீர் பாய்ந்த நகரின் பகுதியானது "உலர்ந்துபோகும்படிக்கு," நதியின் தண்ணீரை வேறுபக்கம் திருப்பினான் என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்விதமாக இந்த பாபிலோன் நகரம் தாக்குதலுக்கு ஆளாயிற்று. 16:12ம் வசனமானது இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டாலும் இல்லையென்றாலும், ஐப்பிராத்து நதி வற்றிபோகுதல் என்பது இன்னமும் ஒரு நாடகத்துவமான விவரிப்பாகவே உள்ளது.* [15]*"வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் காணப்படும், "நரகத்தின் முன்சுவை" என்ற பாடத்தை மறுகண்ணோட்டமிடவும்.* [16]*ஐப்பிராத்து நதியானது யூதர்களுக்கும் அவர்களின் விரோதிகளுக்கும் இடையிலான ஒரு இயற்கைத் தடைச்சுவராயிருந்தது என்றும் நாம் கவனித்திருக்கின்றோம்.* [17]*"சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்கள்" என்ற சொற்றொடரானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை, மற்றும் இவ்விடத்தில் இந்தச் சொற்றொடரைப் பரிசுத்த ஆவியானவர் விவரிப்பதில்லை. சந்தர்ப்பப்பொருளில் இந்தச் சொற்றொடரானது, "ஐப்பிராத்து நதியின் கிழக்குப் பகுதியில் இருந்த அந்த விரோதிகள்" என்பதைக் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட வேளையில், ஐப்பிராத்து நதியானது ரோமப்பேரரசின் கிழக்கு எல்லையைக் குறித்தது; அதற்கும் அப்பால் அவர்கள் தங்கள் ஆளுகையை விரிவாக்க இயலாதிருந்தது.* [18]*ஆறாம் எக்காளத்தைப் பற்றி நாம் படித்தபோது, மற்றவர்களின்மீது பாவத்தின் விளைவு பற்றி விசேஷமாய் நாம் வலியுறுத்தினோம். அதேபோன்ற நடைமுறைப் பயன்பாட்டை இவ்விடத்திலும் ஏற்படுத்த முடியும்: தடைகள் கீழே விழும்போது, பாவி மாத்திரம் அல்ல, அவரைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரும் பாதிக்கப்படுகின்றார்.* [19]*வசனப்பகுதியில் இவ்விடத்தில்தான் நாம் முதன்முதலாக, "கள்ளத் தீர்க்கதரிசி" என்ற சொல்விளக்கத்தைக் கொண்டுள்ளோம்; ஆனால் நாம் 13:11-17ஐப் படித்தபோது, இரண்டாம் மிருகமானது (நிலத்தில் இருந்து எழும்பிய மிருகம்) புத்தகத்தின் எஞ்சிய பகுதியில் "கள்ளத் தீர்க்கத்தரிசி" என்று அழைக்கப்பட்டது என்று குறிப்பிட்டோம். விசேஷமாக 19:20ஐக் காணவும்.* [20]*சில விளக்கவுரையாளர்கள், பரிசுத்தமற்றவைகள் மூன்றின் "வாய்களில்" இருந்து மூன்று அசுத்த "ஆவிகள்" புறப்பட்டு வருதல் பற்றி வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றுள்ளது என்று நம்புகின்றனர்: "ஆவி" என்பது "சுவாசம்" என்றும் அர்த்தப்படக்கூடும். ஆகவே, மூன்று தவளைகள் என்பது தேவபக்தியற்றவர்களின் அடையாளத்துவம் என்றும் பிசாசானவன் இவ்வுலகத்திற்குள் அனுப்பும் பொய்யான வசனங்கள் என்றும் நம்புகின்றனர். பொய்யான வார்த்தைகளின் மூலம்தான் சாத்தான் தன்னைப் பின்பற்றுபவர்களைப் பணிக்கமர்த்தும் முக்கியமான வழிமுறையாக உள்ளது என்பதும் உண்மையாகவே இருக்கிறது.*

[21]James D. Strauss, *The Seer, the Saviour, and the Saved,* Bible Study Textbook Series

(Joplin, Mo.: College Press, 1963), 225. [22]“வெளிப்படுத்தின விசேஷம், 2” என்ற புத்தகத்தில் காணப்படும் “இடி முழக்கக் குளம்பொலிகள்” என்ற பாடத்தில் அர்மகெதோன் பற்றிய குறிப்புகளைக் காணவும். [23]இந்த சந்தர்ப்பப்பொருளில், ‘‘தேவனுடைய மகாநாள்’’ என்பது நியாயத்தீர்ப்பின் கடைசிநாளைக் குறிப்பிடாதிருக்கலாம் - மற்றும் ஆண்டவருடைய வருகை என்பது அவரது இரண்டாவது வருகையை அல்ல, ஆனால் ரோமாபுரிக்கு நியாயந்தீர்க்க வருதலைக் குறிப்பிடலாம். இருப்பினும், முன்னரே குறிப்பிட்டபடி தற்காலிக “வருகை” என்பது நமது சிந்தைகளை, காலத்தின் கடைசியில் ஆண்டவரின் வருகைக்குத் தயார் செய்கிறது. [24]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 84. [25]“திருடனைப் போல்” என்ற வார்த்தைகள் கர்த்தருடைய வருகையானது எதிர்பாராதவிதமாயிருக்கும் என்பதைக் குறிப்பிடுகின்றன. [26]“விழித்துக்கொண்டு” மற்றும் “காத்துக்கொள்கிறவன்” என்பவை மூல கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச் சொல்லில் உள்ளன, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. நாம் கர்த்தருடைய மறுவருகைக்குத் தயாராக இருக்க விரும்பினால், நாம் தொடர்ந்து கவனமாய் இருக்க வேண்டும். [27]இது வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாவது பாக்கியமாக உள்ளது. “வெளிப்படுத்தின விசேஷம், 1” என்ற புத்தகத்தில் 1:3க்கான குறிப்புகளை காணவும். [28]இவ்விடத்தில் நான், வேதவசனங்களின் வாய்மொழி ஏவுதல் பெற்ற தன்மையை நம்பாதிருக்கின்றவர்களான, இறையியல் ரீதியாக விடுதலையாளர்களான விளக்கவுரையாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன். [29]இயேசுவின் வருகை பற்றிய கூற்றில் அவரது வெற்றியானது மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது (வசனம் 15). [30]15ம் வசனமானது நான் ஏற்படுத்தும் கருத்திற்குச் சிறிதளவே முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் நான் இவ்வசனத்தை விரைவில் எடுத்துரைத்து முடித்துள்ளேன். இது மிகவும் நடைமுறைக்குரியதாக இருப்பதால் நீங்கள் இவ்வசனத்தின்மீது அதிக நேரம் செலவிட விரும்பலாம். தயாராக நிலைத்திருத்தல் பற்றிய வேதாகமரீதியான பிற போதனைக்கு, பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமையைக் காணவும் (மத்தேயு 25:1-13).

[31]H. L. Ellison, *1 Peter - Revelation*, Scripture Union Bible Study Books Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 76. [32]‘‘ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து” என்ற சொற்றொடரானது, பரலோகத்தில் உள்ள “ஆலயம்” என்பது தேவனுடைய “அரியணை அறை”யாகவே உள்ளது என்று நாம் அறியச் செய்கிறது. மிருகத்தின் அரியணையானது செயலற்றதாக்கப்பட்டிருந்தது (16:10), ஆனால் தேவனுடைய அரியணையானது இன்னமும் வல்லமைநிறைந்த வகையில் செயல்பட்டுக்கொண்டு இருந்தது. [33]1ம் வசனத்திற்கான விளக்கவுரையைத் திரும்பவும் வாசிக்கவும். [34]இவ்விடத்தில் உள்ள “நிறைவு வினைச்சொல்லானது” இவ்வினையின் செயல்பாடு நிறைவுற்றது அல்லது முழுமையுற்றது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [35]4:5; 8:5; 11:19 ஆகிய வசனங்களைக் காணவும். 6:12ஐயும் காணவும். [36]‘‘பூமியதிர்ச்சிகளுக்கெல்லாம் தாய்’’ என்ற சொற்றொடர் உங்கள் உரையை கேட்பவர்களுக்கு அர்த்தம் கொண்டிருக்கும் என்றால், அதை நீங்கள் இவ்விடத்தில் பயன்படுத்தலாம். ஹோமர் ஹெய்லீ என்பவர், “ரோமப்பேரரசைக் காட்டிலும் பெரிய உலக ராஜ்யம் ஒன்று ஒருக்காலும் இருந்ததில்லை என்பதால், அது விழுந்தபோது ஏற்பட்ட பெரிய பூமியதிர்ச்சி என்பதும் ஒருக்காலும் இருந்திராது” என்று விளக்கம் அளித்தார் (*Revelation: An Introduction and Commentary* [Grand Rapids, Mich.: Baker Book House, 1979], 338). [37]சிலர், பாபிலோனை எருசலேம் என்று அடையாளப்படுத்தி, இங்கு சித்தரிக்கப்பட்ட அழிவுகள், கி.பி. 70ல் அந்த நகரத்தில் ஏற்பட்ட அழிவுகளைக் குறிக்கின்றன என்று நினைக்கின்றனர்.

(ஆனுல்) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் (எருசலேமின் அழிவுக்குப் பின்பு) எழுதப்பட்டது என்றும், பாபிலோன் என்பது ரோமாபுரி நகரின் அடையாளத்துவமாய் உள்ளது என்றும் நம்புவதற்கான நமது காரணங்களை நாம் முன்பே கொடுத்திருக்கின்றோம். எவ்வழியிலும், இவ்வசனப்பகுதியானது, பாவத்தின் விளைவில் இருந்து எந்த நகரமும், எந்த மக்களினமும், எந்த தனிநபரும் தப்ப இயலாது என்று போதிக்கிறது. [38]இந்த சொற்றொடர், முழுமையான அழிவையும் குறிப்பிடலாம். [39]"தேவன் நினைவுகூரும்போது" என்ற முந்தின பாடத்தில், அறிமுகப் பகுதியைக் காணவும். [40]NIV மொழிபெயர்ப்பைக் காணவும்.

[41]Morris, 195. [42]மூல வசனத்தில், "ஒரு தாலந்து அளவுள்ள" என்றுள்ளது (KJV மற்றும் தமிழ் வேதாகமங்களைக் காணவும்). தாலந்தின் எடையானது மாறுபடுவதாக உள்ளதால், இந்தத் தரிசனத்தில் காணப்பட்ட கல்மழையின் மிகச்சரியான எடை என்ன என்று நாம் அறிய வழியெதுவும் இல்லை. மதிப்பீடுகள், 60 பவுண்டுகளில் இருந்து 125 பவுண்டுகள் வரை மாறுபடுகின்றன. "ஒரு நூறு பவுண்டுகள்" என்பது கருத்தைப் பெறக்கூடியதாக உள்ளது. [43]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 304-5. [44]யாக்கோபு 1:13; Eugene H. Peterson, *The Message: New Testament with Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 566. [45]இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், கர்த்தருக்குப் பதில்செயல் செய்வது எவ்வாறு என்பதைப் பற்றி உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குக் கூறுங்கள். இதை நீங்கள் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்திஞல், உங்கள் உரையைக் கேட்பவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கக்கூடும்படிக்கு "அவரிடத்தில் நெருங்கிச் சேருதல்" (யாக்கோபு 4:8) பற்றி ஊக்கப்படுத்த விரும்புவீர்கள் என்பதை நினைவுகூருங்கள். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறாதவர்கள் அதைச் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:36-38; கலாத்தியர் 3:26, 27). வெதுவெதுப்பாகியுள்ள கிறிஸ்தவர்கள் கர்த்தரிடத்திலும் அவரது சபையிடத்திலும் மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமாக உள்ளது (நடபடிகள் 8:22; கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:16). [46]Quoted in Craig Brian Larson, ed., *Illustrations for Preaching and Teaching* From Leadership Journal (Grand Rapids, Mich.: Baker Books, 1993), 180.


## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. ''தூஷித்தல்'' என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது? தேவனையும் அவரது காரணத்தையும் மக்கள் "தூஷிக்கும்" சில வழிமுறைகள் யாவை?
2. சில வேளைகளில் மக்கள் தங்களுக்குத் தாங்களே கொண்டுவரும் பிரச்சனைகளுக்காக மற்றவர்களைக் குற்றப்படுத்துகின்றனரா? சிலர் தேவனைக் குற்றப்படுத்தவும் முயற்சி செய்கின்றனரா?
3. ஐந்தாம் கலசம் ஊற்றப்பட்டபோது நடந்தது என்ன?
4. இன்றைய நாட்களில் மக்களின் இருதயங்கள் மற்றும் மனங்களில் பாவம் எவ்வகையான "இருளைக்" கொண்டு வருகிறது?

5. ஆறாம் கலசம் ஊற்றப்பட்டபோது நடந்தது என்ன?
6. மூன்று தவளைகள் ஒரு படையை ஒன்று கூட்டியது பற்றி, அவைகள் தேவனுக்கு எதிராக வெற்றிகொள்ள இயலாது என்பதற்கு வசனப்பகுதியில் தரப்பட்டுள்ள குறிப்புகள் யாவை?
7. நாம், கிறிஸ்துவின் வருகைக்காக விழித்திருக்க வேண்டும், நமது வஸ்திரங்களை "காத்துக்கொள்ள" வேண்டும் என்று 15ம் வசனம் கூறுகிறது. இது எதனை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
8. ஏழாம் கலசம் ஊற்றப்பட்டபோது நடந்தது என்ன?
9. 18முதல் 21வரையுள்ள வசனப்பகுதியில் நாம் கொண்டுள்ள, தெய்வீக வல்லமையின் காட்சிப்படுத்துதல்கள் யாவை? இவற்றில் புதிய காட்சிப்படுத்துதல் எது?
10. பூமியதிர்ச்சியால் இலக்கு வைக்கப்பட்டது எது? இது அனேகமாக எந்த நகராய் இருக்கலாம் என்பது குறித்து வசனப்பகுதி கருத்தாகத் தெரிவிப்பது என்ன?
11. ரோமாபுரியின் வீழ்ச்சியில் பற்கேற்ற மூன்று காரணிகள் யாவை? இவைகள் ஏழு கோபக்கலசங்களினால் எவ்வாறு விவரிக்கப் படுகின்றன?
12. நமது வாழ்வில் ஏற்படும் இடர்ப்பாடுகள், நாம் தேவனைக் குற்றப்படுத்தும்படியாக்க வேண்டுமா அல்லது நாம் தேவனிடத்தில் திரும்பும்படியாக்க வேண்டுமா?



**ஐந்தாம் கலசம் (16:10)**



**ஆறாம் கலசம் (16:12)**



ஏழாம் கலசம் (16:17-21)